**இலங்கை அச்சக நிறுவனம் - 2023**
**---------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை அச்சக நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளிற்கான தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்ளினூடாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.தே.க.ச) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையினை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்வதற்கு அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | குறித்த நியமத்துடன் தொடர்புடனான இனக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிளான வியாபாரங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 2 பிரிவின் 27 பந்தி பிரகாரம் 2023 ஆண்டின் வருமானமான ரூபா 2,575,925 பெறுமதியினுள் 2023 ஆண்டில் நடாத்தப்படாத பாடநெறிகளிற்காக வெளித் தரப்பினரிடமிருந்து கிடைந்த ரூபா 2,504,000 தொகை உள்ளடங்கியிருந்ததுடன் இதன் காரணமாக நடைமுறை ஆண்டின் இலாபம் ரூபா 2,504,000 இனால் மிகை மதிப்பாடாகியிருந்தது. | அரச அச்சக திணைக்களத்திடமிருந்து பாடநெறி கட்டணத்திற்காக கிடைத்த ரூபா 2,575,925 கட்டணத்திற்குரிய பாடநெறிகளில் 90 சதவீதம் 2023 ஆண்டில் இறுதிப் அரையாண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் எஞ்சிய பாடநெறிகள் 2024 ஆண்டில் முதல் அரையாண்டில் ஆரம்பிக்கப்பட்டன. | குறித்த நியமத்திற்கு இணங்க வருமானம் மாற்றப்படும் சந்தர்ப்பத்தில் இனங்காண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிளான வியாபாரங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 17 பிரிவின் 15C பந்தி பிரகாரம், மீளாய்வாண்டில் மீள்மதிப்பீட்டு மிகையான ரூபா 2,034,211 பெறுமதி ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் காட்டி இருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. | குறித்த நியமத்திற்கு இணங்க மீள்மதிப்பீட்டு மிகையை ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் காட்ட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு**

**1.6.1 பெறவேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை இலங்கை அச்சக நிறுவனத்தினால் நடாத்திய பாடநெறிக்காக அறவிட வேண்டிய மீதி ரூபா 20,131,190 மீளாய்வாண்டில் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒவ்வொறு ஆண்டும் இலங்கை அச்சக நிறுவனத்தில் ஆண்டு தோறும் பாடநெறிகளை நடாத்திச் செல்வதற்கிடையே பாடநெறிகளை விட்டுச் செல்லும் மாணவ/ மாணவிகள் சதவீதமாக பார்க்கும் போது ஆண்டிற்கு சுமாராக 15 அளவாகும். | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீரமானங்களுடன் இணக்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி. 395 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், நிறுவனத்தினால் நடாத்திச் செல்லும் வங்கிக் கணக்கிற்கு உரியதாக மாதாந்த வங்கி இணக்கக்கூற்றை தயாரித்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பித்திருக்கவிலலை. | இது தொடர்பாக அறிந்திருக்காததுடன் எதிர்காலத்தில் இந்த வங்கி இணக்கக்கூற்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வங்கி இணக்கக்கூற்றை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | நி.பி. 756 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், வருடாந்த பண்டகக் கணிப்பீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | தற்போது வருடாந்த பண்டகக் கணிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த பண்டகக் கணிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | பொது முயற்சிகள் திணைக்களத்திலன் | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு | இந்த ஊக்குவிப்பு படிகள் | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2022 திசெம்பர் 21 திகதிய பொது முயற்சிகள சுற்றறிக்கை இலக்கம் PED 09/2022 | இணங்காதவாறு 2022 ஆண்டிற்காக ரூபா 511,250 ஊக்குவிப்பு படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | செலுத்தப்பட்டுள்ளது செயற்பாட்டு மீதிகளினால் ஆகும். இந்த ஊக்குவிப்பு படிகளை செலுத்துவதற்காக நிறுவன பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்துள்ளது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2018 இன் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(1) மற்றும் 40(2) உப பிரிவுகள் | கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம், நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளக கணக்காய்வளர் ஒருவர் நியமிக்கப்பட்டு இருக்கவில்லை. | இலங்கை அச்சக நிறுவனத்தில் கணக்காய்வளர் அல்லது உள்ளக கணக்காய்வாளரிற்கு பதிவி ஸ்தாபிக்கடவில்லை. நிரந்தர பதவிக்கு ஆட்சேர்க்க நேரிட்டால் இந்த பதவிகளிற்கு சம்பளம் மற்றும் ஊதியத்திற்காக பாரிய கிரயத்தை செலவிட நேரிடும். | தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் உள்ளக கணக்காய்வளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். |
| (உ) | 2018 இன் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41(1) மற்றும் 41(2) உப பிரிவுகள் மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் மீதான வழிகாட்டி கோவையின் 4.2 பந்தி | குறித்த ஏற்பாடுகள் பிரகாரம், நிறுவன நடவடிக்கைகளை மேற்கொள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டு இருக்கவில்லை. | நிறுவனத்திற்கு ஆக்கபூர்மற்ற செலவுகள் தொடர்பாக கட்டுப்பாட்டு சபை கவனத்திற் கொள்ள வேண்டுமென்பது கட்டுப்பாட்டு சபையின் முடிவாகும். | தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் மீதான வழிகாட்டிக் கோவையின் ஐந்தாம் அத்தியாயத்தின் இணைப்பு 01. | வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம், ஆண்டிற்குரிய பிரதான செயலாற்றுகை சுட்டியை (KPI) இனங்கண்டு அதனை மதிப்பீடு செய்து அதனால் அடைந்து கொண்ட அளவு எவ்வளவு என (outcome) பரீட்சித்திருக்கவில்லை. | செயலாற்றுகை சுட்டி மற்றும் விளைவுகள் தொடர்பாக காலாண்டிற்கு ஒரு முறை அமைச்சின் நடைபெறும் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் மேலும் கலந்துரையாடப்படும். | பொது முயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டிகளிற்கு இணங்க அறிமுகம் செய்துள்ள செயலாற்றுகை சுட்டிகளை மதிப்பீடு செய்து மேற்கொண்ட அளவை காண்பிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 23,967,654 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 10,817,092 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 13,150,562 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு குறுங்கால முதலீடுகளில் இருந்து கிடைத்த வட்டி வருமானம் ரூபா 9,214,121 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை அச்சக நிறுவனத்தினால் 2022 ஆண்டில் நடாத்திய 5 பாடநெறிகளை 2023 ஆண்டிலும் நடாத்த நடவடிக்கை எடுத்திருந்து, 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டில் ஒவ்வொறு பாடநெறிகளிற்கும் மாணவர்களின் அளவு ප්‍රමාණය 22 சதவீதம் முதல் 85 வரை குறைவடைந்துள்ளதுடன் 2022 ஆண்டில் நடாத்திய பாடநெறிகளிற்கு இடையே 5 பாடநெறிகள் 2023 ஆண்டில் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | அச்சக துறையில் தெரிவு செய்யப்பட்ட விடயப் பரப்பிற்கு அந்த காலப் பகுதியில் ஏற்படும் கேள்வியின் பிரகாரம் இலங்கை அச்சக நிறுவனம் நடாத்தும் சில அச்சக பாடநெறிகள் நடாத்தப்படுவது இரண்டு ஆண்டுகளிற்கு ஒரு முறையாகும். | நிறுவனத்தின் அச்சக நடவடிக்கைளை மேற்கொள்வதற்காக போதிய பணிகளை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2017 நவம்பர் 01 ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை 7 வருட காலத்திற்காக 4 சந்தர்ப்பங்களின் போது, நிறுவனத்தின் ஓய்வூபெற்ற பதிவாளர் அமைச்சரவை அங்கீகாரம் இன்றி ஒப்பந்த அடிப்படையில் பிரதான நிறைவேற்று அதிகாரி பதவிக்கு நியமிக்கப்பட்டு 6 வருடங்களும் 2 மாத காலத்திற்காக அவரின் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 10,210,000 தொகையும், எரிபொருள் படிகளாக மற்றும் படியாக செலுத்தப்பட்டிருந்தது. ரூபா 3,731,668 தொகை மற்றும் வாகன பராமரிப்பு படிகளாக ரூபா 1,200,000 ஆக கூட்டுத் | இந்த ஓய்வுபெற்ற அலுவலரை நிறுவனத்தின் நலனிற்காக தொடர்ந்தும் இந்தப் பதவியில் வைத்துக் கொள்ள வேண்டுமென கட்டுப்பாட்டுச் சபை தீர்மானத்தது. அதன் பிரகாரம் இலங்கை அச்சக நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் குறித்த அலுவலரின் சேவை நீடிக்கப்பட்டுள்ளது இது தொடர்பாக அமைச்சின் செயலாளர் அறிவுருத்தப்பட்டுள்ளார். | உரிய அங்கீகாரத்துடன் குறித்த பதவிக்கு அலுவலர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை ரூபா 15,141,668 தொகை குறித்த காலத்தினுள் நிறுவனத்தினால் செலுத்தப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | 2023 மார்ச் 01 திகதி முதல் 2024 பெப்ரவரி 28 திகதி வரை ஓராண்டு காலத்திற்கு நிறுவனத்தின் ஓய்வுபெற்ற அலுவலர் ஒருவர் கல்விப் பணிப்பாளர் பதிவிக்கு அமைச்சரவை அங்கீகாரம் இன்றி ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு 10 மாதங்களிற்காக அவரின் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,500,000 தொகை நிறுவனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை அச்சக நிறுவன சட்டத்தின் 18 (அ) பிரிவின் அதிகாரத்தின் பிரகாரம் கட்டுப்பாட்டுச் சபையினால் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய அங்கீகாரத்துடன் குறித்த பதவிக்கு அலுவலர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |